**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 232/2019 P.W3/Additional Witness**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. செல்வின் ஜோஸ் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. செல்லம் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** 05.08.2026.

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது குளச்சல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். அங்கு பணிபுரிந்த ஆய்வாளர் குருநாதன் அவர்களின் கையொப்பம் ஆவணங்களை பரிசீலனை செய்யும் பொழுது எனக்கு நன்கு தெரியும் என்பதால் நான் தற்பொழுது ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 27.06.2013ம் தேதி 09.30 மணிக்கு நிலையப் பொறுப்பில் இருந்த காவல் ஆய்வாளர் குருநாதன் மற்றும் போலீஸ் பார்ட்டிகளாகிய சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரபாபு மற்றும் தலைமை காவலர் பெலிக்ஸ், டைட்டஸ் ஆகியோர்கள் சகிதம் குளச்சல் காவல் நிலைய பகுதிகளில் குற்றம் நடைபெறாமல் கண்காணித்து ரோந்து செய்து வரும்போது, குளச்சல் பீச் ரோட்டில் உள்ள அப்சல் வீடியோஸ் என்றபெயர் கொண்ட சிடி கடையில் அரசு அனுமதியில்லாமல் புதுபடங்கள் மற்றும் ஆபாச கேசட்டுகள் விற்பனை செய்து வருவதாக கிடைத்த தகவலின்படி அங்கு சென்று ஆய்வு செய்தபோது, அவரது கடையிலிருந்த 134 அனுமதியில்லாத சிடிகளை கண்டுபிடித்தார்கள்.

3. பின்னர் அத்தாட்சி தயார் செய்து, அத்தாட்சி மூலம் சிடிகளை கைப்பற்றி பொது நபர்கள் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால் சிறப்பு உதவி ஆய்வாளர்

சந்திரபாபு மற்றும் தலைமை காவலர் பெலிக்ஸ் ஆகியோர்களிடம் கையொப்பம் பெற்று எதிரி சகிதம் நிலையம் வந்து அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண். 251/2013 சட்ட பிரிவுகள் 51(b), I , II, III r/w 63 copy right Act மற்றும் 292(A) இ.த.ச.வின்படி வழக்கு பதிவுசெய்துள்ளார்.

4. பின்னர் சம்பவ இடம் சென்று 27.06.2013ம் 22.00 மணிக்கு சென்று சாட்சிகள் அஜ்மல் மற்றும் அகமது ஆகியோர்கள் முன்னிலையில் தெருவிளக்கு வெளிச்சத்தில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் தலைமை காவலர் டைட்டஸ், பெலிக்ஸ், சந்திரபாபு பார்வை மகசர் சாட்சிகள் அஜ்மல் மற்றும் அகமது ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்னர் படிவம் 91ன் மூலம் எதிரி மற்றும் சொத்துக்கள் சகிதம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

5. மேற்படி **அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3, பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகவும், சொத்துக்கள் கைப்பற்றிய அத்தாட்சி அ.சா.ஆ.5 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அதிலுள்ள தடய பொருட்கள் அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.11 (134 சிடிக்கள்) குறியீடு செய்யப்படுகிறது.**

6. அவரது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது சட்ட பிரிவுகள் 51(b), I , II, III r/w 63 copy right Act மற்றும் 292(A) இ.த.ச.வின்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் இந்த சம்பவம் நடைபெறவில்லை எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், சரியல்ல.